சுதந்திர தினத்தை முன்னிட்டு

ரத்த பரிசோதனை முகாம்

உடுமலை, ஆக. 17: சுதந்திர தினத்தை முன்னிட்டு, உடுமலை முன்னாள் ஓய்வுபெற்ற ராணுவ வீரர் நல சங்கத்தினர், உடுமலை லேப், எக்ஸ்ரேஸ், பிரியா நர்சிங் பாரா மெடிக்கல் கல்லூரி, உடுமலை ஆம்புலன்ஸ் சர்வீஸ் யூத் சோசியல் சர்வீஸ் ட்ரஸ்ட் ஆகியவை சார்பில் இலவச ரத்த பரிசோதனை முகாம் நடைபெற்றது.

15க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர். பிளைட் லெப்டினன்ட் தங்கவேல் தேசிய கொடியினை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு கள் வழங்கினார். ராணுவ வீரர்கள் நல சங்கத்தின் தலைவர் ராமலிங்கம், துர்கா எலக்ட்ரிக்கல் ஈஸ்வரசாமி ஆகியோர் முகாமை துவக்கி வைத்தனர். நிகழ்வில் பிரியா நர்சிங் பாரா மெடிக்கல் கல்லூரி கல்லூரி முதல்வர் தவசுமணி, ஆசிரியர்கள் மேனகா, கோகிலா பிரபு, பிரவீனா, பிஆர்ஓ பிரவீன், ஒய்எஸ்எஸ் அறக்கட்டளையின் கார்த்திக், நரசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பட்டினை ஒருங்கிணைப்பாளர் ஜேசு தாஸ் செய்திருந்தார்.

மாணவர்களுக்கு திருக்குறள் புத்தகம் வழங்கல்

பல்லடம் அருகேயுள்ள சித்தம்பலம்புதூர் அரசு பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாணவர்களுக்கு பல்லடம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி திருக்குறள் புத்தகம் வழங்கினார். விழாவில் தேசிய கொடியேற்றி வைத்து ஊராட்சி மன்றத் தலைவர் ரேவதி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்றார். இந்நிகழ்வில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பானுப்பிரியா, ஊராட்சி மன்ற செயாலாளர் புவனேஸ்வரி, வார்டு உறுப்பினர்கள் பழனிச்சாமி, கவிதா, பூங்கொடி, ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

கிராம சபை கூட்டங்களில்

குழந்தை தொழிலாளர் விழிப்புணர்வு

திருப்பூர், ஆக.17: சுதந்திர தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றது. இதில் குழந்தை தொழிலாளர் மற்றும் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழித்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருப்பூர் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) ஜெயக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தொழிலாளர் ஆணையர் அதுல் ஆனந்த் அறிவுரையின்படி, சுதந்திர தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட பொங்கலூர், கரைப்புதூர், நஞ்சியம்பாளையம், கவுண்டச்சிபுதூர், வீரணம்பாளையம், கணக்கம்பாளையம் ஆகிய பகுதிகளில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில், கொத்தடிமை மற்றும் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்தான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து வகையான தொழில்களில் குழந்தைகளும் மற்றும் அபாயகரமான தொழில்களில் வளரிலும் பருவத்தினரும் அகற்றுவது குறித்தான சமூக பங்கேற்பினை ஏற்படுத்திட வலியுறுத்தப்பட்டது. கிராம பஞ்சாயத்துகள், ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றின் சார்பாக வெளியிடப்படும் பணி ஒப்பந்தங்களில் குழந்தை மற்றும் கொத்தடிமை தொழிலாளர்கள் எவரும் பணியமர்த்தப்படவில்லை என ஒப்பந்ததாரர்களிடமிருந்து சுயசான்று பெற்றிட வலியுறுத்தப்பட்டது. அரசு மூலம் அறிவிக்கும் ஒப்பந்தப்பத்திரத்தில் குழந்தை மற்றும் கொத்தடிமை தொழிலாளர்களுக்கு எதிரான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இடம் பெற்றிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி ஆகஸ்ட் மாதத்தில் திருப்பூர் மாவட்டம் முழுவதும் குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான ஆய்வுகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் மாவட்ட தடுப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

அருள்புரம் ஊராட்சி மன்ற வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழித்தல் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அரசு மருத்துவ கல்லூரியில் மெழுகுவர்த்தி ஏந்தி மவுன அஞ்சலி

திருப்பூர், ஆக. 17: மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் இரண்டாமாண்டு முதுநிலை மருத்துவம் பயின்று வந்தார். இவர் கல்லூரி கருத்தரங்க கூடத்திலேயே சடலமாக மீட்கப்பட்டார். மருத்துவ மாணவியின் உடற்கூறாய்வில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்நிலையில், உயிரிழந்த மருத்துவ மாணவியின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தக் கூடிய வகையில் நேற்று திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவ மாணவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். மேலும் கருப்பு பட்டை அணிந்தும், கொலைக்கு நீதி கேட்டும், இந்த சம்பவத்தை கண்டிக்கும் விதமாகவும் பதாகைகளை ஏந்தி இருந்தனர்.

ஸ்ரீ பரஞ்சோதி யோக கல்லூரியில் சுதந்திர தின விழா

உடுமலை, ஆக. 17: திருமூர்த்திமலையில் உள்ள ஸ்ரீ பரஞ்சோதி யோக கல்லூரியில் 78வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. கல்லூரி பொறுப்பு முதல்வர் சண்முகப்பிரியா வரவேற்றார். தாளாளர் செங்குட்டுவன் தலைமை வகித்தார். கல்லூரி மற்றும் உலக சமாதான ஆலயத்தின் அறங்காவலர்கள் ஹரி, யுவராஜ்ஞலு, விஸ்வநாதன், மெய்ஞான ஆசிரியர்கள் ஈஸ்வரி, சுந்தரராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாணவ, மாணவிகளின் சிலம்பம், யோகாசனம், பாட்டு, பேச்சு ஆகியவை நடைபெற்றன. கல்லூரியின் நிறுவனர் குருமகான அருளுரை வழங்கினார். அவர் பேசுகையில், "மனிதனை மனிதனாக்குவது, உள்ளுணர்வை வழங்குவது யோக கலையே. அதன் மூலம் இந்திய நாட்டை தலைநிமிர செய்ய முடியும்" என்றார். பேராசிரியர் சிவசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தீரன் சின்னமலை கல்லூரியில்

78வது சுதந்திர தினவிழா

திருப்பூர், ஆக.17: திருப்பூர், வஞ்சிபாளையத்தில் செயல்பட்டு வரும் தீரன் சின்னமலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 78வது சுதந்திர தின விழா கல்லூரி வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் பள்ளி மற்றும் கல்லூரி ஸ்தாபன தலைவர் பெஸ்ட் எஸ்.ராமசாமி தலைமை தாங்கினார். அறக்கட்டளை நிர்வாக குழு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் ரேச்சல் நான்சி பிலிப் வரவேற்றார்.

இதனைத்தொடர்ந்து அறக்கட்டளை துணைத்தலைவர் முருகசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து கல்லூரி மாணவிகள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்து பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தினார்கள். பின்னர் மாணவிகள் பாரம்பரிய கலையான சிலம்பத்தை சுற்றி ஆச்சரியப்படுத்தினர்.

அதே போல், யோகா நிகழ்ச்சியில் பல்வேறு ஆசனங்களை செய்து அசத்தினர். பின்னர், கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. முடிவில் தலைவர் பெஸ்ட் எஸ் ராமசாமி மாணவிகளுக்கு பரிசு வழங்கினார். விழாவில் கல்லூரி மாணவிகள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பெருமாநல்லூர் கேஎம்சி பள்ளியில்

சுதந்திர தினவிழா கோலாகலம்

அவிநாசி, ஆக.17: அவிநாசி அருகே பெருமாநல்லூரில் உள்ள கே.எம்.சி சீனியர் செகண்டரி பொதுப்பள்ளியில் சுதந்திர தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பள்ளி தலைவர் சண்முகம் முன்னிலை வகித்தார். பள்ளித் தாளாளர் மனோகரன் தலைமையேற்று, நாடு சிறந்தால் நாம் அனைவரும் சிறப்பாக இருப்போம் என்றும், நாட்டுப்பற்றை குறித்தும் மாணவர்களிடையே பேசினார். சிறப்பு விருந்தினராக திருப்பூர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி மூவர்ண கொடியை ஏற்றி, மாணவர்கள் அனைவரும் பெற்றோர் விரும்பும் வண்ணம் உயர் கல்வியை கற்க வேண்டும் என்றும், பெற்றோர் கனவினை நனவாக்க வேண்டும் என்றும், நாட்டின் விடுதலைக்காக உழைத்த தேச தலைவர்களைப் பற்றியும் விரிவாக பேசினார். பள்ளி தலைமை செயல் அதிகாரி சுவஸ்திகா சுதந்திர தினத்தின் இன்றியமையாமை குறித்து மாணவர்களிடம் பேசினார். பள்ளி மாணவ, மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளி முதல்வர் சீனிவாசன் நன்றி கூறினார்.



TNPSC GROUP-2 தினகரன் மாதிரி வினாவிடை

வரலாறு

131. ஹொய்சாலர்களின் நினைவுச் சின்னங்கள் காணப்படுவது

(A) ஹம்பி மற்றும் ஹோஸ்பர்
(B) ஹாலபிட் மற்றும் பேலூர்
(C) சிருங்கேரி மற்றும் தார்வார்
(D) மைசூர் மற்றும் பெங்களூர்

132. கீழ்க்கண்ட எந்த இணைகள் சரியாக இணைக்கப்பட்டுள்ளன?

(A) ஹரப்பா நாகரீகம்- பழுப்பு வண்ண மண்பாண்டங்கள்
(B) குஷாணர்கள் - காந்தாரக்கலை
(C) முகலாயர்கள் - பகாரி கலை
(D) மராட்டியர்கள் - அஜந்தா ஓவியங்கள்

133. கீழ்க்கண்ட எந்தவொரு நகரத்தில் லிங்கராஜர் ஆலயம் அமைந்துள்ளது?

(A) புவனேஸ்வர் (B) பிஜப்பூர்
(C) கொல்கத்தா (D) சரவணபெலகோலா

134. கீழ்க்கண்ட எந்தவொரு ஆங்கிலேயர் முதன்முதலாக பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்தவர்

(A) வில்லியம் ஜோன்ஸ்
(B) சார்லஸ் வில்கின்ஸ்
(C) அலெக்ஸாண்டர் கன்னிங்காம்
(D) ஜான் மார்சல்

135. கீழ்க்கண்ட எந்த வரிசை சரியான காலவரிசையைக் குறிப்பிடுகின்றது?

(A) ராமானுஜர் - சங்கராச்சாரியார்- சைதன்யர்
(B) ராமானுஜர் - சைதன்யர் - சங்கராச்சாரியர்
(C) சங்கராச்சாரியார் - சைதன்யர் - ராமானுஜர்
(D) சங்கராச்சாரியர் - ராமானுஜர் - சைதன்யர்

136. பண்டைக்கால இந்தியாவில் கீழ்க்கண்ட எந்தவொரு நகரம் கிழக்கில் இருந்து மேற்கு மற்றும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் வணிகப்பாதைகளுக்கு சந்திப்பு மையமாக விளங்கியது?

(A) கௌசாம்பி (B) உஜ்ஜயினி
(C) மதுரா (D) பைத்தான்

137. கீழ்க்கண்ட பௌத்த சமயத்தினைச் சேர்ந்த சமயவியல் அறிஞர்களில் கனிஷ்கரோடு தொடர்புடையவர் யாவர்?

1. அஸ்வகோசர் 2. வசுமித்திரர்
3. பார்ஷ்வா 4. சங்கரக்சர்
5. தர்மாத்ரதர் 6. மாத்ரிசேடர்
(A) அனைவரும் (B) 1, 2, 3, 4
(C) 1, 2, 3, 5, 6 (D) 1, 2, 3, 4, 5

138. கனிஷ்கர், குவிஷ்கர் மற்றும் வாசுதேவர் விநியோகித்த நாணயங்கள்?

1. தங்கம் 2. தாமிரம்
3. வெள்ளி 4. காரீயம்
(A) 1, 2, 3, 4 (B) 1, 2, 3
(C) 1, 2 (D) 1, 3

139. ரோமனிய அரசுகளுடன் முதன்முதலாக வணிக உறவுகளைத் தோற்றுவித்தவர்கள்?

(A) குஷாணர்கள்
(B) தமிழர்கள் மற்றும் சேர அரசுகள்
(C) மேற்கத்திய சாகர்கள்
(D) வகடகர்கள்

140. கீழ்க்கண்ட எந்தவொரு வெளிநாட்டவர்களின் இந்திய அரசுகள் தங்க நாணயங்களை அச்சிடவில்லை?

1. இந்தோ கிரேக்கர்கள்
2. பார்த்தியர்கள்
3. குஷாணர்கள்
4. சாகர்கள்
(A) 1 மற்றும் 2 (B) 2 மற்றும் 3
(C) 3 மற்றும் 4 (D) 2 மற்றும் 4

141. சரியான இணைகளைத் தேர்க

(1) பிரதிகாரர்கள் - அஞ்மீர்
(2) பாலர்கள் - வங்காளம்
(3) சௌகான்கள் - அவந்தி
(A) 1,2 (B) 2 மற்றும் 3
(C) 2 மட்டுமே (D) அனைத்தும்

142. தவறான இணைகளைத் தேர்க?

(1) ரத்தோர்கள் - கன்னோசி
(2) தோமர்கள் - டெல்லி
(3) சேனர்கள் - வங்காளம்
(A) 1,2 (B) 2, 3
(C) அனைத்தும் (D) இவற்றுள் எதுவுமில்லை

143. சிறப்பு வாய்ந்த விருபாக்சா ஆலயம் அமைந்துள்ள இடம்?

(A) ஹம்பி (B) புவனேஸ்வரம்
(C) கோனார்க் (D) பீஜப்பூர்

144. ஹசாரா ராமசாமி கோவிலை கட்டியவர்?

(A) ஹரிஹரர் I (B) கிருஷ்ண தேவராயர்
(C) ராமராயர் (D) தேவராயர் I

145. ஹசாரா ராமசாமி கோவில் அமைந்துள்ள இடம்?

(A) பட்டடைக்கல் (B) கோல்கொண்டா
(C) பிதார் (D) ஹம்பி

146. சரியான இணைகளைத் தேர்க

(1). சகல்கானி - 40 பேரின் குழு
(2). ரேவார் போர் - முகமுது காசிம்
(3). மாமலுக் ஆட்சி - குத்புதீன் ஐபெக்
(4). லக்பாக்ஷா - இல்டும்மிஷ்
(A) 1, 3 மற்றும் 4 (B) 1, 2 மற்றும் 3
(C) 2, 3 மற்றும் 4 (D) அனைத்தும்

147. தவறான இணைகளைத் தேர்க

(1). குத்புதின் பக்தியார்காகி - குதூப்மினார்
(2). தங்கா - தங்க நாணயம்
(3). ஜித்தால் - வெள்ளி நாணயம்
(4). அமீர் குஸ்கு - இந்தியக்கிளி
(A) 1 மற்றும் 4 (B) 2 மற்றும் 4
(C) 1 மற்றும் 3 (D) 2 மற்றும் 3

148. சரியான இணைகளைத் தேர்க?

(1). தர்-உல்-ஷாபா - மருத்துவமனை
(2). ஜிஸ்யா - தலவரி
(3). தமாஸ்ரின் - மங்கோலிய தளபதி
(4). லஷ்ஜத்-இ-சிக்கந்தர் சாகி - இசை வடிவம்
(A) 1, 2 (B) 1, 2 மற்றும் 3
(C) 1, 2, 3 மற்றும் 4 (D) 1, 2 மற்றும் 3

149. திவான்-இ-ரியாசத் கீழ்க்கண்ட எதனோடு தொடர்புடையது?

(A) பாதுகாப்பு (B) நீதி
(C) சமயம் (D) சந்தை

150. சோந்தார் அல்லது தக்காவி எனப்படுவது?

(A) விவசாயத்திற்கான கடன்
(B) தொழிற்சாலைகளுக்கான கடன்
(C) ராணுவ வீரர்களுக்கான கடன்
(D) இசைக்கலைஞர்களுக்கான கடன்

151. சரியான இணைகளைத் தேர்க

(1). திவான்-இ-கைரத் - ஏழை முஸ்லீம்களின் பெண் மக்கள் திருமணத்திற்கு உதவும் துறை
(2). திவான்-இ-முஸ்டகராஜ் - நிலுவையில் உள்ள நில மற்றும் விவசாய வரிகளை வசூல் செய்வதற்கான துறை
(3). அலாய் தர்வாஜா - குதுப்மினாருக்கான நுழைவு வாயில்
(4). திவான்-இ-பந்த்கான் - அடிமைகளுக்கான துறை
(A) 1, 2 மற்றும் 3 (B) 2, 3 மற்றும் 4
(C) 1 மற்றும் 4 (D) அனைத்தும்

152. சரியான இணைகளைத் தேர்ந்தெடு:

(1). தாக் - படை வீரர்களுக்கான அங்க அவையங்கள் பற்றிய குறிப்புகள்
(2). ஹூலியா - குதிரைகளுக்கு முத்திரையிடுதல்
(A) 1 மட்டுமே (B) 2 மட்டுமே
(C) 1 மற்றும் 2 (D) இவற்றுள் எதுவுமில்லை

153. நவ்ரோஜ் என்னும் பண்டிகையை இந்தியாவில் அறிமுகம் செய்தவர் யார்?

(A) பால்பன் (B) இல்டுட்மிஷ்
(C) அலாவுதீன் கில்ஜி (D) சிக்கந்தர் லோடி

154. நாற்பதின்மர் குழு அல்லது ஜகல்கானி என்னும் அமைப்பை அழித்தவர் யார்?

(A) இல்டுட்மிஷ் (B) பால்பன்
(C) அலாவுதீன் கில்ஜி (D) ரஸியா

155. சரியான இணைகளைத் தேர்க

(1). ஷாநாமா - பிர்தௌசி
(2). கிதாப்-உல்-ஹிந்த் - அல்பருணி
(3). தபகத்-இ-நஸிரி - மின்காஜ் சிராஜ்
(4). துக்ளக் நாமா - அமீர்குஸ்ரூ
(A) 1 மற்றும் 4 (B) 2 மற்றும் 4
(C) 1 மற்றும் 3 (D) அனைத்தும்

156. சுலைமான் எனப்படுபவர்?

(A) அரேபிய பயணி
(B) மொராக்கோ பயணி
(C) கஜினியின் அரசவைப்புலவர்
(D) கோரியின் அரசவைப்புலவர்

157. கற்பூர மஞ்சரி மற்றும் காவ்ய மிமாம்சம் நூல்களை எழுதியவர்?

(A) ஜெயதேவர் (B) பம்பா
(C) ராஜசேகர்
(D) வஜ்ரதத்தர்

158. கீழ்க்கண்டவற்றுள் ருக்மி என அறியப்படும் அரசு எது?

(A) சேனர்களின் அரசு
(B) பிரதிகாரர்களின் அரசு
(C) ராட்டிரகூடர்களின் அரசு
(D) பாலர்களின் அரசு

159. சரியான இணைகளைத் தேர்க

(1). மிகிர் போஜா - பிரதிகாரர்கள்
(2). கோபாலர் - பாலர்கள்
(3). தண்டிதுர்கா - ராட்டிரகூடர்கள்
(4). மூலராஜா - சேனர்கள்
(A) 1, 2 மற்றும் 4
(B) 1, 2 மற்றும் 3
(C) 2, 3 மற்றும் 4
(D) அனைத்தும்

160. கீழ்க்கண்ட ஆட்சியாளர்களுள் யாரொருவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்?

(A) சமந்தசேனர்
(B) முதலாம் கிருஷ்ணர்
(C) அமோகவர்ஷர்
(D) கோபாலர்

161. சரியான இணைகளைத் தேர்க

(1). கீத கோவிந்தம் - ஜெயதேவர்
(2). கைலாசநாதர் ஆலயம் - முதலாம் கிருஷ்ணர்
(3). சூடாமணி விகாரம் - ராஜேந்திர சோழன்
(4). கஜுராகோ - சண்டேலர்கள்
(A) 1, 2 மற்றும் 4
(B) 1, 2 மற்றும் 3
(C) 2, 3 மற்றும் 4
(D) அனைத்தும்

162. தவறான இணைகளைத் தேர்க?

(1). பிருகத் ஜாதகம் -வராகமிகிரர்
(2). வேதாந்த சூத்திரபாஷ்யம் -சங்கராச்சாரியர்
(3). சித்தாந்த சிரோமணி -பாஸ்கராச்சார்யா
(4). சிசுபாலவதம் - பானுபட்டர்
(A) 1 (B) 2 (C) 4
(D) இவற்றுள் எதுவுமில்லை

163. பூரியில் ஜெகநாதர் ஆலயம் மற்றும் லிங்கராஜர் ஆலயம் போன்ற பிரசித்த பெற்ற ஆலயங்களைக் கட்டியவர் யார்?

(A) அனந்தவர்மன் சோதா
(B) கபிலேந்திரர்
(C) புருசோத்தமன்
(D) முதலாம் பானுதேவர்

164. பட்டிணம் எனப்படுவது?

(A) தொழில் நகரங்கள்
(B) வாணிப நகரங்கள்
(C) கோயில் நகரங்கள்
(D) துறைமுக நகரங்கள்

165. சோழர் காலத்தின் நிர்வாக அலகுகளை இறங்கு வரிசையில் அமைக்கவும்?

(1). வளநாடுகள் (2). நாடுகள்
(3). மண்டலங்கள் (4). கூரம்கள்
(A) 1-3-2-4 (B) 3-1-2-4
(C) 2-4-1-3 (D) 4-1-2-3

விடைகள்

131.B	132.B	133.A	134.B	135.D
136.B	137.A	138.A	139.B	140.D
141.C	142.C	143.A	144.B	145.D
146.B	147.D	148.C	149.D	150.A
151.D	152.C	153.A	154.B	155.D
156.A	157.C	158.D	159.B	160.D
161.A	162.C	163.A	164.D	165.B

தொகுப்பு: மு.சிபிகுமரன்
ஆர்வம் ஐஏஎஸ் அகாடமி

தொடரும் - 55

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...
தினகரன்
890415677 7
9.30 AM - 6.00 PM